[*2024 பிப்ரவரி 14*

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி துவக்கப்பட்டு வெள்ளி விழா, பொன் விழா, பவள விழா கடந்து, நூற்றாண்டு விழாவைக் காணுகின்ற தருவாயிலுள்ள பழமையான நகராட்சியாகும். இந்த நகராட்சி அலுவலகம் 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. 36 வார்டுகளை உள்ளடக்கிய சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள்தொகை கொண்ட நகராட்சிக்கு, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளிலே தெரிவித்திருக்கின்றார்கள். இருக்கின்ற நிதிநிலைமைக்கேற்ப அந்த நகராட்சியிலே புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பிருக்குமானால், இந்த ஆண்டு அறிவிக்கும்போதே அது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

13—

புறவழிச் சாலை

***12739—திரு. மா. சின்னதுரை:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி நகர் பகுதிக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2024 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணி முடிந்தவுடனே, புறவழிச் சாலை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடி பேரூராட்சி மிக நெருக்கடியான ஒரு நகராக இருக்கிறது. அங்கே 17 மண்டபங்கள் இருக்கின்றன. விழாக் காலங்களிலே மிக நெருக்கடியை உருவாக்குகின்ற காரணத்தால் புறவழிச் சாலை மிக அவசியம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். கந்தர்வகோட்டையிலிருந்து காட்டுநாவல், சுந்தம்பட்டி, வெள்ளாளவிடுதி, மங்களாகோயில், அம்புக்கோயில் வழியாக கறம்பக்குடி செல்லக்கூடிய சாலையை அகலப்படுத்தி, மருதங்கள்விடுதி நால்ரோட்டிலே roundtana அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறம்பக்குடியை பொறுத்தளவிற்கு மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில்தான் DPR தயார் செய்து கொண்டிருக்கின்றோம். பொதுவாக, இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனே, நகரப் பகுதிகளிலெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புறவழிச் சாலை அமைக்க முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், 117 நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கின்ற பணிகளிலே இப்போது துறை தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை 50 நகரங்களுக்கு தயார் செய்து கொண்டிருக்கின்றோம்.

அதில் கறம்பக்குடியும் ஒன்று. 35 இடங்களில் நில எடுப்புப் பணிகளில் இத்துறை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது 32 இடங்களில் புறவழிச் சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் கறம்பக்குடிக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். நீங்கள் சொல்கின்ற கந்தர்வகோட்டையிலிருந்து திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி, பட்டுக்கோட்டை வழியாக அம்புக்கோயில் செல்லும் சாலையானது 15.6 கிலோ மீட்டர் நீளமுடைய மாவட்ட முக்கியச் சாலையாகும். அந்தச் சாலையில் 2 கிலோ மீட்டர் வரை 2022–2023–ல் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் மூலமாக ரூ.250 இலட்சம், அதாவது இரண்டரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வழித்தடத்திலிருந்து இருவழித் தடமாக ஏற்கெனவே அகலப்படுத்திவிட்டோம். மீதமுள்ள 13.60 கிலோ மீட்டர் நீளமுடைய சாலையை அரசின் நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக தொடர்ந்து நாங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னவாசல் ஒன்றியம், பொம்மாடி மலையிலிருந்து தொடையூர் செல்லும் சாலையில் இரயில்வே கீழ்ப்பாலம் உள்ளது. அதேபோல, தாவூது மில்லிலிருந்து வடசேரிப்பட்டிக்குச் செல்லக்கூடிய இடத்தில் இரயில்வே கீழ்ப்பாலம் உள்ளது. மழைக் காலத்தில் டாக்டர் ஒருவர் காரில் செல்கிறபோது மரணித்துவிட்டார். இப்போது பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, கீழ்ப்பாலத்தை அகற்றி, உடனடியாக உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், பொம்மாடி மலையிலிருந்து தொடையூர் செல்லும் சாலையில் ஓர் இரயில்வே பாலம் ஏற்கெனவே இருக்கிறது. தாவூது

2024 பிப்ரவரி 14]

மில்லிலிருந்து வடசேரி சாலையில் கீழ்ப்பாலம் உள்ளது. மழைக் காலங்களில் கீழ்ப்பாலத்தில் தண்ணீர் நிரம்பி பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் செல்ல முடியாமல் உள்ளார்கள் என்பதை அரசு அறியும். கீழ்ப்பாலம் வழியாகப் பேருந்து செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதையும் அரசு உணர்கிறது. அதேநேரத்தில் கீழ்ப்பாலங்களை, மேம்பாலங்களாக அமைத்துத் தர, அதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகளை தயார் செய்கின்ற நிலையில் அரசு இருக்கின்றது. ஆனாலும்கூட, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் கேட்ட, அன்னவாசல் ஒன்றியம், பொம்மாடி மலையிலிருந்து தொடையூர் செல்லும் சாலை, தாவூது மில்லிலிருந்து வடசேரி செல்லும் சாலை இந்த இரண்டும் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாக இருக்கிறது. ஏனென்றால், அது மாநில நெடுஞ்சாலையாக இல்லை. ஒன்று, மாவட்ட முக்கியச் சாலையாக இருக்க வேண்டும். அது ODR, MDR, SH*–ல் இருக்க வேண்டும். இந்த மூன்றும்தான் மாநில அரசு நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சாலைகள். அதில் இருந்தது என்றால், இதற்கு ஏற்பாடு செய்யலாம். ஏற்கெனவே, அது ஒன்றிய அளவில் இருக்கின்ற காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிந்துரை செய்து, அந்தத் துறையின் சார்பாக ஒரு ஆணையைப் பிறப்பித்து, எங்கள் துறைக்கு வந்தால்தான், அதை நாம் முழுமையாக எடுத்துச் செய்ய முடியும். எனவே, சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி, அங்கிருந்து அந்தச் சாலையை தேர்வு செய்து, உள்ளாட்சித் துறைக்கு அனுப்பினால்தான், அது எங்களுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொண்டால், அரசின் சார்பாக நாங்கள் முயற்சி எடுப்போம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

மணிமண்டபத்திற்கு பூங்கா

***75398—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—